IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 159 /2012
Deposition of witness for PW1

Name : பாபு (எ) ஹரிபாபு

Father's Name : திருநீலகண்டன்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 23 day of February, 2021.

குறுக்கு விசாரணை

நான் 10 ம் வகுப்புவரை படித்துவிட்டு ஐ.டி.ஐ முடித்துள்ளேன். நான் எனது நிரூபணவாக்குமூலத்தை ஆங்கிலத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு தேவை என கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தாயாரை திருமணம் செய்துகொடுத்த ஊர் ரெண்டாடி ஆகும். எனது தாயார் எனது தகப்பனாருடன் 1974 முதல் 1981 வரை ஒன்றாக வசித்து வந்தார்கள். எனது தந்தையார் இறந்தபோது எனக்கு 2 1/2 வயது. எனது உடன் பிறந்த சகோதரர் தம்பி. நான் எனது தந்தையார் இறந்த பிறகு அந்த ஊரில் இன்று வரை நான் இல்லை. எனது தாயார் என்னையும், எனது தம்பியையும் எனது மாமா லோகமூர்த்தி வீட்டிற்கு சிறுவயதிலேயே அழைத்துவந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது பாட்டி கொல்லாபுரியம்மாள் வீட்டிற்கு அழைத்துவந்துவிட்டார். எனது பாட்டியும், எனது மாமா லோகமூர்த்தியும் ஒரே வீட்டில் எனது அம்மாவுடன் இருந்துவந்தார்கள் என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ12 வரை வீட்டுவரி ரீசீதுகளை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனது தாயாரின் உரிமையை காட்டக்கூடிய பட்டா, ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாயார் உயிருடன் இருக்கும்போதே அவரின் பெயரில் பட்டா பெறுவதற்கு நான் எந்த மனுவும் செய்யவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது தகப்பனார் இறந்ததால் தான் எனது தாயாருக்கு தகரகுப்பத்தில் வேலை கிடைத்து சென்றுவிட்டார் என்றால் சரிதான். எனது தாயார் உயிருடன் இருக்கும்போதே பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால்

சரிதான். எனது தாயார் உயிருடன் இருக்கும்போதே இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ17 முதல் வா.சா.ஆ 44 வரையிலான ஆவணங்களை மின்சார ரசீதுகளாக தாக்கல் செய்துள்ளேன் என்றும், அவ்வாறு மின் இணைப்பு பெறுவதற்கு மின்வாரியத்திடம் தாக்கல் செய்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ11 வரிரசீதுகளில் நில அளவை எண், கதவு எண் போன்ற விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ9 வரிரசீதுகளிலும் கதவு எண். 3/171 என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நிலஅளவை எண் என்ற இடத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ7 வரிரசீதுகளில் வரிவிதிப்பு எண், கதவு எண் போன்ற விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல வரிவிதிப்பு எண். 479 என்றும், கதவு எண். 4/55 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ5 வரிரசீதுகளில் அதுபோன்ற கதவு எண், வரிவிதிப்பு எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குரை சொத்துவிவரத்தில் கதவு எண்.4/55 என குறிப்பிட்டுள்ளேன். வா.சா.ஆ9 வரிரசீதுகளிலும் கதவு எண். 3/171 என குறிப்பிடப்பட்டுள்ளதால் இந்த ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்மந்தப்பட்டதில்லை என்றால் சரியல்ல. வழக்க தாக்கல் செய்தபோது வழக்கு சொத்தின் சர்வே எண்.315 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதை பின்னிட்டு மனு செய்து திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தம்பி பாலமுருகன் என்பவருக்கு எனது தாய்மாமா லோகமூர்த்தியின் மகளை திருமணம் செய்துகொடுத்துள்ளார் என்றால் சரிதான். தற்பொழுது அவர்கள் சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான். இன்று வரை தாவா சொத்தில் எனது தம்பி மனைவி உமாமகேஸ்வரி அனுபவமும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார் என்றால் சரிதான். இன்று வரை தாவா சொத்திற்கு பிரதிவாதி தான் உமாமகேஸ்வரி பெயரில் சொத்துவரியும், மின்கட்டண ரசீதுகளையும், பட்டாவும், வரைபடமும் இருந்து வருகிறது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனது தாயார் எனது பாட்டி வீட்டிற்கு வந்தபோது ஒரு அறையை ஒதுக்கி அதில்

எனது தாயார் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. எனவே அதனடிப்படையில் எனது தாயார் தான குடியிருந்த அறைக்கு அவரது பெயரில் வரிரசிதுகளும், மின்கட்டண ரசிதுகளும் செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. எனது தாயார் இறந்தபிறகு நான இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.